# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# ஆத்தூர்
------
## அசல் வழக்கு எண். 47/2021

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 02 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | ஜாதி | : | |
| த.பெ | : | வெள்ளைச்சாமி | தொழில் | : | வயது முதிர்வின் காரணமாக வேலைக்கு செல்லவில்லை |
| கிராமம் | : | ஆத்தூர் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 91/2026 |
| தேதி | : | 02.02.2026 | | | |

வாதி தரப்பு குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கு எந்த எந்த சர்வே எண்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். பட்டா எண்.1315 ல் அடங்கிய ஆத்தூர் புலம் சர்வே எண்.281, 281/2 ஆகிய சர்வே எண்களுக்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உங்களுக்கும், உங்கள் தம்பிக்கும் அசல் வழக்கு எண்.150/1988 மற்றும் அசல் வழக்கு எண். 447/2007 ஆகிய வழக்குகள் நடந்து முடிந்துவிட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 447/2007 ல் நீங்கள் நீதிமன்ற சாட்சியம் பி.வா.சா.1 ஆக அளித்துள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் ஆவணம் தான் அசல் வழக்கு எண்.447/2007 ல் நீங்கள் அளித்த நீதிமன்ற சாட்சியங்கள் என்றால் சரிதான். அந்த நீதிமன்ற சாட்சியங்கள் **(வா.சா.ஆ.20/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வா.சா.ஆ.20 ஆன 04.02.2011 தேதியிட்ட உங்கள் குறுக்கு விசாரணையில் பக்கம் 2 , பத்தி 2 ல், 3 வது வரியில் அந்த நடவடிக்கையின் போது ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் வாதி, பிரதிவாதி இருவரும் சேர்ந்து பேசி முடிவு செய்தோம் என்றால் சரிதான். அந்த பேச்சுவார்த்தை டிசம்பர் 6, 1993 ம் தேதியில்

எனக்கு வாதி குறிப்பிட்ட காலத்திற்குள் கெடுவிற்குள் ரூ.10,000/- த்தை செலுத்தி ரீசீது பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கால கெடு நிர்ணயம் செய்து ஒப்பம் எழுதப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை ஏற்கனவே வா.சா.ஆ-3 ஆக தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். அந்த குறுக்கு விசாரணை பகுதி மட்டும் **(வா.சா.ஆ.21/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அந்த வழக்கில் 31.03.2011 அன்று செய்த குறுக்கு விசாரணை தொடர்ச்சியில் முதல் 8 வரியான வா.சா.ஆ.3 மேல்குறிப்பில் வடபுறம் உள்ள 1 ஏக்கர் 45 செண்ட்டை வாதியும், தென்புறம் உள்ள 1 ஏக்கர் 46 செண்ட்டை நானும் அடைந்து அனுபவித்து கொள்ள வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிணறு இருவருக்கும் பொது பாத்தியம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வடபுறம் உள்ள மரங்கள் அனைத்தும் வாதியும், தென்புறமுள்ள மரங்கள் அனைத்தையும் நானும் அடைந்து கொள்வதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வடபுறம் வாதி தேக்குமரம் வைத்து வெட்டி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த வா.சா.ஆ.3 ஆவணப்படி வடபுறம் வாதியும் தென்புறம் நானும் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த குறுக்கு விசாரணை தொடர்ச்சியின் பகுதி மட்டும் **(வா.சா.ஆ.22/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் பேசியபடி எனக்கு பணம் தரவில்லை.

உங்களுக்கும், உங்கள் தாயாருக்கும், உங்கள் தம்பிக்கும் இடையே ஏற்பட்ட சமரச உடன்பாட்டு குறிப்பாணையை அசல் வழக்கு எண்.447/2007 ல் வா.சா.ஆ.3 ஆகவும், அதே ஆவணத்தை இந்த வழக்கில் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்கள் வழக்குப்படி சமரசம் உங்களுக்குள் ஏற்பட்டது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்கள் என்றால் சரிதான். நீங்கள் பேசிக்கொண்டபடி உங்களுக்கு ரூ.10,000/- ஐ உங்கள் தம்பி கொடுக்கவில்லை என்று மட்டும் தான் கூறுகிறீர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.22 ல் சமரச உடன்படிக்கை படி வடபுறம் தம்பியும், தென்புறம் நீங்களும் அனுபவித்து வருவதாக சாட்சியம் அளித்துள்ளீர்கள்

என்றால் சரிதான். உடன்படிக்கை ஏற்பட்டு ஓராண்டு காலம் வரை என் தம்பியை வடபுறமும், நான் தென்புறமும் அனுபவிக்க அனுமதித்தேன். அவர் சொன்னபடி பணம் தராததால் ஓராண்டுக்கு பிறகு நான் உடன்பாட்டின் படி அனுபவிக்க அனுமதிக்கவில்லை. சமரக உடன்படிக்கை எந்த வருடம் நடைபெற்றது என்றால் சரியாக நினைவில்லை. சமரச உடன்படிக்கை 1993 ல் ஏற்பட்டது என்றும், அசல் வழக்கு எண்.447/2007 ல் நீங்கள் அளித்துள்ள சாட்சியத்தில் நீங்களும், உங்கள் தம்பியும சேர்ந்து தாவா சொத்தை வடபகுதியை தம்பியும், தென்பகுதியை நீங்களும் அனுபவித்து வருவதாக தான் சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றும், உண்மையில் ஒரு வருடத்திற்கு பிறகு உங்கள் தம்பியை நீங்கள் அனுபவிக்க விடவில்லை என்றால் நீங்கள் அந்த வழக்கிலேயே அது குறித்து சொல்லியிருப்பீர்கள் என்றும், அவ்வாறு கூறாமல் தற்போது பின்யோசனையிட்டு இந்த வழக்கில் தாவா சொத்துக்களை உடன்படிக்கை ஏற்பட்ட ஒரு வருடத்திற்கு பிறகு உடன்படிக்கை படி உங்கள் தம்பியை நீங்கள் அனுபவம் செய்ய விடவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

நீங்கள் சமரச உடன்படிக்கை ஏற்பட்ட ஓராண்டுக்கு பின் உங்கள் தம்பியை ஒத்துக்கொண்டபடி அனுபவிக்க விடவில்லை என்று அசல் வழக்கு எண்.447/2007 வழக்கிலும் கூறவில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை, நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் கூறாமல் தற்போது தான் பின்யோசனையாக உங்கள் தம்பியை தாவா சொத்தை வடபுறத்தில் ஓராண்டுக்கு பிறகு அனுபவம் செய்யவிடவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

இரு தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இந்த வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor